முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.10.2022**, சனிக்கிழமை

1. அரங்கனின் பதம் பற்றிட
அனுகூலம் கூடி உலகினில்
வரங்கள் பல வலியக்கிட்டி
வசமாவரே உலகோர் ஞானிகளாக
2. ஆகவே அற்புதம் நிகழ்த்திடும்
அரங்கன் மலரடி போற்றி
வகைபட சுபகிருது தரிவை திங்கள்
வரமென மூவேழுதிகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 21ம் நாள் 08.10.2022, சனிக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசிதனை
வழங்குவேன் கண்ணானந்தர் யானும்
சோரமிலா ஞானவான்கள் படை
சுத்தநெறிபட உலகினில் பெருக
4. பெருகவே அரங்கன் படைத்த
பிரணவக் குடிலை நோக்கி
வருகைதனை உலகோர் புரிய
வசமாகும் ஞானபலம் தானும்
5. தானாக இன்னும் சக்திகூடி
தரணியோர் ஞானிகள் நிரம்பும்
ஞான உலகம்தனை படைக்க
நம்பிக்கை வைத்து தொடர
6. தொடரவே தேசிகனார் வழியில்
திருவருள் எனும் முழுமைதனை
தடையின்றி அடைதல் கண்டு
தரணியில் மாற்றம் புரிவர்
7. மாற்றம் தரும் மாதவராஜன்
மகத்துவம்தனை கண்டுத் தேற
ஆற்றல்பட தருமசேவை எனும்
அன்னதானம்தனை செய்ய வேண்டும்
8. வேண்டியே தொடர் சேவையாக
விடாது செய்து வருதல் காண
உண்டாகும் உலகினில் தருமபலம்
உயர்வாகி அதுவே வழிநடத்தும்
9. வழிநடத்தும் வள்ளல் தன்மையாகி
வழிமொழிந்து உலகம் எங்கிலும்
அழியாமை தரும் அரங்கன் திருவடி
அணிவகுத்து அறத்தினை பெருக்க

10. பெருக்கவே உலகம் பெருமாற்றம்
பிரணவக் குடிலை தலைமையாக
கருத்தாகக் கொண்டு இனிதே
கலியினில் அற்புதம் நிகழும்

11. நிகழவே ஞானிகள் பூசையை
நிலைத்தன்மை கொண்டு உலகில்
மகிழவே தொடரவே மாற்றம் சடுதி
மொழிந்திட்ட அனுகூல ஆசிமுற்றே

–சுபம்–